


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ நவம்பர். 20, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 46 ❖ ரூ.10

தமிழ் மொழியைக்காக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு

# பெருமிதம் !

## நாட்டின் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தியவர்கள் ராமானுஜர், ஆதிசங்கரர் காசி தமிழ்ச் சங்கமம் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு



வாரணாசி, நவ.20–

“பழம்பெரும் மொழியான தமிழைக் காக்க வேண்டிய கடமை, இந்திய மக்கள் அனைவருக்கும் இருக்கிறது,” என்று காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்வைத் தொடங்கி வைத்து பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

உத்தரப் பிரசேத்தின் வாரணாசியில் நடைபெறும் ஒரு மாத நிகழ்ச்சியான ‘காசி தமிழ்ச் சங்கமம்’ நிகழ்வை (நேற்று) சனிக்கிழமை பிரதமர் நரேந்திர மோடி முறைப்படி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வு டிசம்பர் மாதம் 16ம் தேதி வரை நடைபெற உள்ளது. விழாவைத் தொடங்கி வைத்து பிரதமர் மோடி பேசியதாவது:

உலகின் பழமையான நகரம் காசி. காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியின் மூலம் தமிழகத்தில் இருந்து காசிக்கு வந்திருக்கும் எனது விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்கிறேன். நமது நாட்டில் பல்வேறு சங்கம பெருவிழாக்கள் சிறப்பாகக்கொண்டாடப் படுகின்றன. நதிகளின் சங்கமம், கொள்கைகளின் சங்கமம், ஞானம் மற்றும் விஞ்ஞானத்தின் சங்கமம், கலாச்சாரத்தின் சங்கமம் என அனைத்து சங்கமங்களும் விழாக்களாகக் கொண்டாடப் படுகின்றன.

வேற்றுமையில் ஒற்றுமை கொண்டது நமது நாடு. அதைக் கொண்டாடவே காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி. காசியைப் போலவே தமிழ்நாடும் பழமை வாய்ந்தது. பழம்பெரும் கலாச்சாரத்தைக் கொண்டது. இவை இரண்டின் சங்கமமும், காசி தமிழ்ச் சங்கமம் எனும் ஒரு மாத கால நிகழ்ச்சியின் மூலம் கொண்டாடப்பட இருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த குமர குருபர ஸ்வாமிகள், காசியை கர்மபூமியாகக் கொண்டு இங்கே வாழ்ந்துள்ளார். பிறகு, தஞ்சாவூர் மாவட்டத்திற்குச் சென்று அங்கு காசி விஸ்வநாதர் ஆலயத்தை நிறுவி இருக்கிறார்.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை இயற்றியவர் மனோண்மணியம் சுந்தரனார். இவரது குருநாதர் கோடகநல்லூர் சுந்தரஸ்வாமிகள். இவர், காசியின் மணிகர்ணிகா காட் பகுதியில் வாழ்ந்து, இங்கே கோயில் அமைத்திருக்கிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்த மகான்கள் ராமானுஜரும், ஆதிசங்கரரும் நாட்டின் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தி இருக்கிறாரகள். அவற்றை நாம் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

தமிழ் நமது பெருமை. தமிழ் மொழியை காக்க வேண்டியது இந்திய மக்கள் ஒவ்வொருவரின் கடமை. தமிழ் மொழியை நாம் காக்கத் தவறினால் அது நாட்டிற்கே பேரிழப்பாகிவிடும். மொழி பேதங்களை கைவிட்டுவிட்டு நாம் தமிழ் மொழியை காத்திட வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு**



▶ சென்னை தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் இறையன்பு தலைமையில் நேற்று திருவண்ணாமலை மாவட்டம் அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற உள்ள கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து அரசுத்துறை செயலாளர், துணைத் தலைவர்கள், மாவட்ட கலெக்டர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

## இந்திய தேர்தல் ஆணையராக அருண் கோயல் நியமனம்

புதுடெல்லி, நவ.20–

தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையராக ராஜீவ் குமார் உள்ளார். அவருக்கு அடுத்து தேர்தல் ஆணையராக அனுப் சந்திர பாண்டே பதவி வகித்து வருகிறார். இந்நிலையில் புதிய தேர்தல் ஆணையராக அருண் கோயலை மத்திய சட்ட அமைச்சகம் நியமனம் செய்துள்ளது. மேலும் இவரது நியமனத்துக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு ஒப்புதல் வழங்கி உள்ளார்.

தற்போது இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையராக ராஜீவ் குமார் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய தேர்தல் ஆணையராக ஓய்வுபெற்ற முன்னாள் ஐ.ஏ.எஸ்., அதிகாரி அருண் கோயல் 1985 பஞ்சாப் கேடர் ஐ.ஏ.எஸ்., அதிகாரி ஆவார். இவர் மத்திய கனரக தொழிற்சாலை அமைச்சகத்தின் செயலாளராக பதவி வகித்து வந்தார்.



அண்மையில் வி.ஆர்.எஸ்., பெற்று தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

குஜராத் மாநில சட்டசபைத் தேர்தல் வாக்குப்பதிவு விரைவில் நடைபெற இருக்கிறது. அடுத்த மாதம் 2 மாநிலங்களுக்கான தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட உள்ளன. அதை தொடர்ந்து கர்நாடகா, ராஜஸ்தான், மத்திய பிரதேச மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

வரும் 2024ம் ஆண்டே நாடே எதிர்பார்க்கும் மக்களவைத் தேர்தலும் நடத்தப்பட உள்ளது. இந் நிலையில் அருண் கோயலின் இந்த நியமனம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## மயிலாடுதுறையை பேரிடர் மாவட்டமாக அரசு அறிவிக்க விவசாயிகள் கோரிக்கை

மயிலாடுதுறை, நவ.20–

சீர்காழியில் மழை விட்டு 9 நாட்களாகியும் வடியாத வெள்ளநீர். விவசாயம் முழுவதும் அழிவு,, மயிலாடுதுறையை பேரிடர் பாதிப்பு மாவட்டமாக அரசு அறிவிக்கவேண்டும்என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தமிழகத்தில் பருவமழை காரணமாக கடந்த 11,12ம் தேதிகளில் தொடர்ந்து பெய்த கன மழையால் தமிழகத்திலேயே மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் அதிகபட்சமாக சுமார் 43 செ.மீ., மழை கொட்டி தீர்த்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

மழை நின்று 9 நாட்களாகியும் மழைநீர் வடியாமல் விளைநிலம் முழுவதுமாக தண்ணீர் தேங்கி கடல்போல் காட்சி அளிக்கிறது. இதனால் சீர்காழி, கொள்ளிடம், கோடங்குடி, உமையாள்பதி, கடவாசல், புதுப்பட்டினம், ஆச்சாள்புரம், வடகால், எடமணல், பழையபாளையம், தாண்டவன்குளம், திருநகரி, தென்னாம்பட்டினம், ஆலங்காடு உள்ளிட்ட சுமார் 100 கிராமத்தில் விளைநிலம் முற்றிலும் மூழ்கி அழுகியது.

மேலும், பல்வேறு இடங்களில் உப்பனாறு, பொறை வாய்க்கால், புதுமண்ணியாறு, கழுதை வாய்க்கால், ராஜன்வாய்க்கால் உள்ளிட்ட ஆற்றின் கரைகள் உடைந்தும், வழிந்து தண்ணீர் விளைநிலங்களில் புகுந்தது. இதன் காரணமாக சீர்காழி தாலுகாவில் சுமார் 30 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விளை நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. வயல் மட்டத்திலிருந்து நான்கு அடி வரை தண்ணீர் சூழ்ந்துள்ள நிலையில் நடவு செய்த சம்பா இளம் நாற்றுகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

கடந்த பத்தாண்டு ஆட்சிகாலத்தில் வடிகால் வசதிகள் தூர்வாராமல் விவசாய நிலங்களில் புகுந்த தண்ணீர் வடிவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர். சீர்காழி சுற்றுவட்டாரம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது.

கடந்த அரசை போல் இந்த அரசும் அலட்சியப்படுத்தாமல் உடனடியாக மராமத்து பணிகளை மேற்கொண்டு வடிகால் வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும். மயிலாடுதுறையை பேரிடர் பாதிப்பு மாவட்டமாக அரசு அறிவிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சென்னை ஐகோர்ட் 6 நுழைவு வாசல்கள் மூடல்: வக்கீல்கள், மக்கள் செல்ல தடை

சென்னை, நவ.20–

சென்னை ஐகோர்ட், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பாரம்பரிய கட்டிடமாகும். இது தற்போது வரை அதன் பழமை மாறாமல் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர்கள் உயர்நீதிமன்றத்தை கட்டியதால் அதற்கு மரியாதை செய்யும் வகையிலும், மேலும் இது பொதுச்சொத்து அல்ல என்பதை வலியுறுத்தும் வகையிலும் ஆண்டுக்கு



ஒருமுறை அதன் நுழைவு வாசல்கள் பூட்டப்படுகின்றன.

பல ஆண்டுகளாக பின்பற்றப்படும் சம்பிரதாயத்தை சென்னை ஐகோர்ட்டின் 6 நுழைவு வாசல்களும் நவ.19ம் தேதி நேற்றிரவு 8 மணி முதல் இன்று 20ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிவரை ஒருநாள் முழுவதும் மூடப்படுகின்றன. இதற்கான அறிவிப்பை ஐகோர்ட் பதிவாளர் ஹரி வெளியிட்டார்.

நுழைவு வாசல்கள் அனைத்தும் மூடப்பட்டு இருக்கும்போது வக்கீல்கள் மற்றும் மக்கள் உள்பட யாரும் நீதிமன்றத்துக்குள் செல்ல அனுமதி இல்லை. இதற்காக அனைத்து வாயில்கள் முன் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்லூரி பேராசிரியர்கள் ஓவர் கோட் அணிய தமிழக உயர்கல்வித்துறை அதிரடி உத்தரவு

சென்னை, நவ.20–

கல்லூரி பேராசிரியர்கள் மாணவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்தி காட்டும் விதமாக மேலங்கி (ஓவர் கோட்) அணிய வேண்டும் என உயர் கல்வித்துறை தெரிவித்துள்ளது.



கல்லூரி பேராசிரியர்களுக்கு ஆடை கட்டுப்பாடு விதிப்பது தொடர்பாக உயர் கல்வித்துறையில் இருந்து கல்லூரி கல்வி இயக்ககம், தொழில்நுட்ப கல்வி இயக்ககம், மற்றும் அனைத்து உயர்கல்வி நிறுவனங்களின் பதிவாளர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில், அனைத்து கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்களும் மாணவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டும் விதமாக மேலங்கி (ஓவர் கோட்) அணிய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பேராசிரியர்களுக் கிடையே வேறுபாடுகளை ஏற்படுத்தாதவாறு சீருடை போன்ற கண்ணியமிக்க ஆடைகளை அணிய வேண்டும் என்றும், பேராசிரியர்கள் தங்கள் உடலமைப்பை வெளிக்காட்டாதவாறு மேலங்கியை அணிய வேண்டும் என்றும் உயர்கல்வித்துறை பிறப்பித்துள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதன்முறையாக தனது மகளை வெளியுலகுக்கு காட்டிய வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்

பியாங்யாங், நவ.20–

வடகொரியாவில் நடக்கக்கூடிய விஷயங்கள் வெளியுலகிற்கு பரவலாக தெரிவதில்லை. அதிபர் கிம் ஜாங் உன் குடும்பம் பற்றிய தகவலிலும் ரகசியம் காக்கப்பட்டு வருகிறது. இவருக்கு 2 மகள்கள் மற்றும் ஒரு மகன் என மொத்தம் 3 குழந்தைகள் உள்ளனர் என நம்பப்படுகிறது. அவர்களில் ஒருவர் கடந்த செப்டம்பரில் நடந்த தேசிய விடுமுறை தினகொண்டாட்டத்தின் போது, வெளியான புகைப்படத்தில் காணப்பட்டார்.



இந்நிலையில், முதன்முறையாக ஏவுகணை சோதனை நிகழ்வின்போது, தனது மகளையும் உடன் அழைத்துச் சென்ற கிம், அது தொடர்புடைய புகைப்படங்களை முதன்முறையாக உலகிற்கு நேற்று தெரியப்படுத்தி உள்ளார். அதில், வெண்ணிறத்தில் கோட் அணிந்தபடி தனது தந்தையின் கைகளை பிடித்தபடி கிம்மின் மகள் நடந்து செல்வது போல் படம் உள்ளது.

கிம் ஜாங் உன்னுக்கு மகள் இருப்பது பற்றி வெளியுலகுக்கு இதற்கு முன் தெரியாத நிலையில், இது பெரிய ஆச்சரியம் ஏற்படுத்தி உள்ளது என அந்நாட்டில் இருந்து வெளிவரும் கே.சி.என்.ஏ., என்ற செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது. எனினும், கிம்மின் மகள் பெயர் வெளியிடப்படவில்லை.

இது பற்றி அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஸ்டிம்சன் மையத்தின் வடகொரிய தலைமை நிபுணரான மைக்கேல் மேடன் கூறுகையில், கிம்மின் மகளை பொது நிகழ்ச்சியில் முதன்முறையாக பார்க்கும் தருணம் இது. இதன்படி, கிம்மின் மகளுக்கு தற்போது 12 முதல் 13 வயது இருக்கக் கூடும். அடுத்த 4 முதல் 5 ஆண்டுகளில் கிம்மின் மகள் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கோ அல்லது ராணுவ சேவையில் ஈடுபடவோ தயாராகக் கூடும்.

கிம்மின் மகள், நாட்டின் தலைமைத்துவத்திற்கான படிப்பு மற்றும் பயிற்சி பெறுவார் என்பதற்கான அடையாளமாக அவர் வெளியுலகுக்கு வந்துள்ளார். அவர் தனது அத்தையை போன்று, ஓர் ஆலோசகராக, செயல்களை பின்னின்று நடத்துபவராக இருப்பார் என மேடன் கூறியுள்ளார்.

வெளியுலகுக்கு கிம் ஜாங் உன் மகள் அடையாளப் படுத்தப்பட்டு இருப்பது சர்வதேச அரசியல் வட்டாரத்தில் பரபரப்புடன் பார்க்கப்படுகிறது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

**முயலும் போது முட்களும் உன்னை முத்தமிடும். எல்லோரும் பயணிக்கிறார்கள் என்று நீயும் பின் தொடராதே.. உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு..!**








| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,925 | Rs.5,327 |

# கருவிழி பதிவு மூலம் ரேஷன் பொருள் வினியோகம் விரைவில் வழங்க ஏற்பாடு: அமைச்சர் சக்கரபாணி தகவல்

திண்டுக்கல், நவ.20-

தமிழகம் முழுவதும் கருவிழி பதிவு மூலம் ரேஷன் பொருட்கள் வழங்கும் முறை விரைவில் அமலுக்கு வர இருக்கிறது என்று உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி தெரிவித்தார்.



திண்டுக்கல்லில் நடந்த கூட்டுறவு வாரவிழாவில் உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி கலந்து கொண்டு பேசியதாவது: கூட்டுறவு சங்கங்களுக்கு தி.மு.க., ஆட்சியில் தான் சொந்த கட்டிடம் கட்டித்தரப்பட்டது. தற்போது 6,500 பேருக்கு கூட்டுறவுத்துறையில் வேலை உருவாக்கப்பட்டு இருக்கிறது.

இந்தியாவிலேயே 2 வது இடமாக கொடைக்கானலில் கூட்டுறவு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைய இருக்கிறது. தமிழகம் முழுவதும் அனைத்து ரேஷன் கடைகளுக்கும் சொந்த கட்டிடம் கட்டப்படும். விண்ணப்பித்த 15 நாட்களில் ரேஷன் கார்டு வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்திருந்தார்.

அதன்படி, தமிழகம் முழுவதும் 13 லட்சத்து, 50 ஆயிரம் புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் புதிதாக விண்ணப்பித்து உள்ளவர்களில் தகுதியான அனைவருக்கும் ரேஷன் கார்டு வழங்கப்படும். தற்போது ரேஷன் கடைகளில் விரல் ரேகை பதிவு மூலம் பொருட்கள் வழங்கப்படுகிறது.

கூலி வேலைக்கு செல்வோர், முதியவர்களின் விரல் ரேகை சரியாக பதிவாகாததால், பொருட்கள் வாங்குவதில் சிரமம் இருக்கிறது. இந்த சிரமத்தை தவிர்க்கும் வகையில் கருவிழி பதிவு மூலம் ரேஷன் பொருட்கள் வழங்கும் முறை தமிழகம் முழுவதும் விரைவில் அமலுக்கு வர இருக்கிறது. இதன் முன்னோட்டமாக சென்னையில் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. மேலும் ரேஷன் கடைக்கு வர இயலாதவர்கள் உரிய படிவத்தை பூர்த்தி செய்து வழங்கினால், பிற குடும்ப உறுப்பினர்கள் மூலம் பொருட்களை வாங்கி கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சர் சக்கரபாணி பேசினார்.

# ஓ.பி.எஸ்., தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவுக்கு சுப்ரீம் கோர்ட்டில் இ.பி.எஸ்., பதில் மனுத்தாக்கல்

சென்னை, நவ.20-

அ.தி.மு.க பொதுக்குழு செல்லும் என்ற சென்னை ஐகோர்ட் உத்தரவுக்கு எதிராக ஓ.பி.எஸ்., தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவுக்கு எடப்பாடி பழனிசாமி தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் பதில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



அதில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: அ.தி.மு.க., பொதுக்குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக உள்ளனர். எனவே, தற்போது ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மனு அற்பமான ஒன்று ஆகும். தொண்டர்கள் விருப்பத்திற்கேற்பவும், கட்சியின் நலனைக்கருதியும் ஒற்றை தலைமை என்பது ஏற்படுத்தப்பட்டது. கட்சியின் பொதுக்குழுவுக்கே அனைத்து அதிகாரமும் உள்ளது. எனவே, அதன் முடிவே இறுதியானது.

மேலும், கட்சியின் செயல்பாடுகளில் முடக்கம் ஏற்பட்டதால் தான் ஒற்றை தலைமை வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அதுவே பொதுக்குழுவிலும் பிரதிபலித்தது. ஓ.பன்னீர்செல்வம் அ.தி.மு.க., அலுவலகத்தை சூறையாடி கட்சியின் விதிகளை மீறியுள்ளார். கட்சிக்கு எதிராக செயல்பட்டுள்ளார். எனவே, அவர் எந்த நிவாரணமும் பெற தகுதி இல்லாதவர்.

கட்சி பொதுக்குழு கூட்டப்படுவதற்கு முன்னர் ஓ.பன்னீர்செல்வம் தரப்புக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது. அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றியே கட்சியின் பொதுக்குழு கூட்டப்பட்டது.

இவ்வாறு பதில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.








▶ தென்காசி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நேற்று அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி-1 பதவிக்கான முதல் நிலைத் தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தை அரசு பணியாளர் தேர்வாணைய உறுப்பினர் பாலுசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் உடனிருந்தார்.

# கந்தர்வகோட்டையில் சிறப்பு கிராம சபை கூட்டம்

கந்தர்வகோட்டை, நவ.20-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம் கந்தர்வகோட்டை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் 2020-21, 2021-22ம் ஆண்டுக்கான சமூக தணிக்கை நடைபெற்றது.



இந்த அறிக்கையை சமர்ப்பிக்க சிறப்பு கிராமசபைகூட்டம்சிவன் கோயில் வளாகத்தில் நடைபெற்றது. இந்த கிராம சபை கூட்டத்திற்கு மூத்த குடி மக்களான இந்திரா நகர் ராஜலட்சுமி தலைமை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி முன்னிலை வைத்தார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட வள அலுவலர் அப்துல் காதர் ஜெய்லானி கலந்து கொண்டார். தணிக்கை அலுவலர் அந்தோணியம்மாள் அறிக்கையை வாசித்தார்.

இந்தஊராட்சியில்சில தவறுகள் நடந்துள்ளது. அதைசரிசெய்துகொண்டு சம்பந்தப்பட்டவரிடம் வசூல் செய்ய வேண்டும். மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில், ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் வேலை வழங்க வேண்டும். இந்த பணியானது உங்கள் ஊரை நீங்கள் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய திட்டம். நீங்கள் முறையாக வேலை செய்து முழு ஊதியத்தை பெற முயற்சி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஊராட்சி செயலாளர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

# உலக கழிப்பறை தின விழிப்புணர்வு பேரணி

கந்தர்வகோட்டை, நவ.20-

உலக கழிப்பறைகள் தினத்தையொட்டி, கந்தர்வகோட்டையில் கந்தர்வகோட்டை ஊராட்சி நடுநிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.



கந்தர்வகோட்டை ஒன்றிய பெருந்தலைவர் ரெத்தினவேல் கார்த்திக் மழவராயர் தலைமையில் பேரணி நடைபெற்றது. பேரணியில் கந்தர்வகோட்டை எம்.எல்.ஏ., சின்னதுரை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், நளினி, அரசு அலுவலர்கள், கந்தர்வகோட்டை ஊராட்சி தலைவர் தமிழ்செல்வி, நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர், ஆசிரியைகள், பள்ளி மாணவ மாணவிகள், மகளிர் சுய உதவி குழு அமைப்புகளை சேர்ந்த மகளிர் கலந்து கொண்டனர்.

முன்னதாக கந்தர்வகோட்டை ஒன்றிய அலுவலகத்தில் இருந்து துவங்கிய பேரணி காந்தி சிலை, மாரியம்மன் கோவில் வீதி, பெரிய கடைவீதி, மெயின் ரோடு வழியாக மீண்டும் ஒன்றிய அலுவலகம் சென்றடைந்தது.



▶ புதுகை மாவட்டம் கறம்பக்குடியில் நீரினை பயன்படுத்துவோர் சங்க தேர்தலில் கறம்பக்குடி சங்கத் தலைவராக துரைராஜன் 92 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். கரு கீழ தெரு சங்க உறுப்பினராக வெற்றி பெற்றார். வெற்றி பெற்றவர்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் மாரி சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கறம்பக்குடி வட்டாட்சியர் ராமசாமி உள்பட பலர் உடனிருந்தனர்.

# டி.என்.பி.எஸ்.சி., தொகுதி – 1 பதவிக்கான தேர்வு புதுகையில் 4,025 பேர் பங்கேற்பு: 2,187 பேர் ஆப்சென்ட்

புதுக்கோட்டை, நவ.20-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில், பல்வேறு பணிகளுக்கு தகுதி உள்ள நபர்களை தேர்ந்தெடுக்கும் வகையில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி தமிழகம் முழுவதும் டி.என்.பி.எஸ்.சி., தொகுதி - 1 பதவிக்கான தேர்வு நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கலைஞர் கருணாநிதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மன்னர் கல்லூரி, அரசு ராணியார் மகளிர் மேல்நிலைப்பள்ளி, மௌண்ட் சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட 5 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 22 தேர்வு மையங்களில் நேற்று நடைபெற்ற தேர்வை 4,025 நபர்கள் எழுதினர். 2,187 நபர்கள் தேர்விற்கு வரவில்லை.

தேர்வு மையத்திற்குள் கைப்பேசி, கால்குலேட்டர் உள்ளிட்ட பல்வேறு மின்னணு சாதனங்கள் தடைசெய்யப்பட்டிருந்தது. இத்தேர்வினை 22 முதன்மை கண்காணிப்பு அலுவலர்களும், 9 சுற்றுக்குழு அலுவலர்களும், 2 பறக்கும் படை அலுவலர்களும், 22 ஆய்வு அலுவலர்களாலும் கண்காணிக்கப்பட்டது. இத்தேர்வு நிகழ்வுகளை 23 வீடியோகிராபர்கள் மூலமாக கண்காணித்து தேர்வு நடைமுறைகள் அனைத்தும் வீடியோ பதிவு செய்யப்பட்டது.

தேர்வுகள் நடைபெற்று வரும் அனைத்து மையங்களிலும்தேர்வுகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு, சுமுகமான முறையில் தேர்வுகள் நடைபெற்றது. புதுகை மாவட்ட உயரதிகாரிகள் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்போட்டார் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அமீர் பாஷா, உதவி இயக்குநர் (வேளாண்மை) செல்வி மற்றும் அலுவலர்கள் தேர்வு மையங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

# நான் தி.மு.க., கூட்டணிக்குச் செல்வேனா? அ.ம.மு.க., பொதுச்செயலாளர் டி.டி.வி., விளக்கம்

சுவாமிமலை, நவ.20-

"நான் தி.மு.க., கூட்டணிக்குச் செல்வேன் என எதிர்பார்க்காதீர்கள். அரசியலில் எனது உயரம் என்ன? என எனக்கு நன்றாகத் தெரியும்," என்று அ.ம.மு.க., பொதுச்செயலாளர் டி.டி.வி., தினகரன் அதிரடியாக தெரிவித்தார்.



மயிலாடுதுறை மாவட்டத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட செல்வதற்கு முன் தஞ்சை மாவட்டம் சுவாமிமலையில் நேற்று அ.ம.மு.க., பொதுச் செயலாளர் டி.டி.வி., தினகரன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

இரட்டை இலை சின்னம் இல்லாமல் எடப்பாடி பழனிச்சாமியால் எதுவும் செய்ய முடியாது. அவரது சொந்த ஊரில் கூட உள்ளாட்சி அமைப்பு தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. நாங்கள் புதிதாக கட்சியை ஆரம்பித்து தேர்தலை சந்தித்ததை போல் எடப்பாடியால் சந்திக்க முடியுமா?. இவர் ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வத்தையே கட்சியை விட்டு நீக்கியவர். ஜெயலலிதாவின் உண்மை விசுவாசிகள் ஓரணியில் திரண்டால் தான் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற முடியும்.

கால்பந்து வீராங்கனை பிரியா மரணம் தொடர்பாக தமிழக அரசின் செயல்பாடு திருப்தியாக இருந்தது. அவரது குடும்பத்திற்கு வழங்கிய இழப்பீடு, அரசு வேலை, வீடு என அரசு அறிவித்தது வரவேற்கத்தக்கது. அரசு நல்லது செய்தால் வரவேற்க வேண்டும். இதனால் நான் தி.மு.க., கூட்டணிக்கு செல்வேன் என எதிர்பார்க்காதீர்கள். அரசியலில் எனது உயரம் என்ன? என எனக்குத் நன்றாக தெரியும்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வழங்க வேண்டும். குடும்பத்திற்கு ரூ.1,000 நிவாரணம் என்பது மிக, மிகக்குறைவு. இதை ரூ.3,000ஆக உயர்த்தி வழங்க வேண்டும். இவ்வாறு தினகரன் தெரிவித்தார்.

# புதுக்கோட்டை அருகே டூவீலர் மீது கார் மோதல்: தலைமை ஆசிரியை படுகாயம்

அன்னவாசல், நவ.20-

புதுக்கோட்டை விநாயகபுரம் இரண்டாம் வீதியை சேர்ந்தவர் வேலாயுதம். இவரது மனைவி வீரத்தங்காள் (வயது 48). இவர் பரம்பூர் அருகே உள்ள மேட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் புதுக்கோட்டையில் இருந்து தினமும் பள்ளிக்கு இருசக்கர வாகனத்தில் சென்று வருவகிறார்.

இந்நிலையில் சம்பவத்தன்று வீட்டில் இருந்து பள்ளிக்கு இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு மீண்டும் மாலையில் வீடுதிருபிய வீரத்தங்காள் புதுக்கோட்டை பெருமநாடு சாலையில் உள்ள தனியார் கல்லூரி அருகே வந்தார். அப்போது பின்னால் வந்த கார் வீரத்தங்காள் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் மீது மோதியது.

இதில், படுகாயமடைந்த அவரை அருகில் இருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக புதுக்கோட்டை தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து அன்னவாசல் போலீசார், பெருஞ்சுனையை சேர்ந்த திருப்பதி (வயது 25) மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உலக கழிப்பறை தின விழிப்புணர்வு பேரணி

அன்னவாசல், நவ.20-

அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உலக கழிப்பறை தினத்தினை முன்னிட்டு, பள்ளி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.



பேரணிக்கு திட்ட இயக்குநர் கவிதப்பிரியா தலைமை தாங்கினார். ஒன்றியக்குழு தலைவர் ராமசாமி முன்னிலை வகித்தார். இதில் திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்ப்போம், தனிநபர் கழிப்பறையை வீடுதோறும் அமைத்து சுகாதாரம் காப்போம். ஒவ்வொருவரும் தங்களது வீடுகளையும், சுற்றுப்புறத்தையும் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் இன்றி சுத்தமாக வைக்க வேண்டும். திறந்தவெளியில் இயற்கை உபாதைகளை தவிர்த்து அதற்காக உள்ள கழிவறைகளை பயன்படுத்த நாம் கற்பதைவிட இதை நம்வீட்டு குழந்தைகளுக்கு சொல்லித்தர வேண்டும் என்று வலியுறுத்தி விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி ஊர்வலமாக சென்றனர்.

பேரணியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரேமவதி, ஆனந்தன், அலுவலக மேலாளர் கணேசன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள், அலுவலகபணியாளர்கள், பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இதேபோன்று அன்னவாசல் பேரூராட்சியில் செயல் அலுவலர் ஆசாராணி தலைமையில் உலக கழிப்பறை தினத்தினை முன்னிட்டு பள்ளி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் இளநிலை உதவியாளர் சர்மிளா உள்ளிட்ட பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

# நீர் நிலை பயன்படுத்துவோர் சங்க தேர்தல்

கந்தர்வகோட்டை, நவ.20-

கந்தர்வகோட்டை அருகே நடைபெற்று வரும் நீர் நிலைகளைப் பயன்படுத்துவோர் சங்க தேர்தலில் மட்டங்கால் ஊராட்சியில் அரசு நடுநிலைப் பள்ளியில் நடைபெற்று வருகிறது நேற்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு துவங்கியது.



இந்நிலையில், அந்த வாக்குச்சாவடியில் போதிய மின்சாரம் வசதி இல்லாமல் தேர்தல் அதிகாரிகள் செல்போன் டார்ச் லைட் வெளிச்சத்தின் மூலம் வாக்குப்பதிவு பணியில் ஈடுபட்டனர். இதனால் வாக்குச் செலுத்த வந்தவர்கள் சிரமப்பட்டனர்.



▶ தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் கி.செந்தில் ராஜ் நேற்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் குரூப்- I தேர்வு மையமான தூத்துக்குடி சக்தி விநாயகர் ஹிந்து வித்யாலயா சீனியர் செகண்டரி பள்ளியினை பார்வையிட்டார்.துத்துக்குடி சார் ஆட்சியர் கௌரவ் குமார், தூத்துக்குடி வட்டாட்சியர் செல்வகுமார் உடன் உள்ளனர்.

# ரிஷ்ஸ் இண்டர்நேஷனல் ஸ்கூலில் ஸ்போர்ட்ஸ் அகாடமி தொடக்க விழா



மாங்காடு, நவ.20–

சென்னை, குமணன்சாவடி அடுத்த மாங்காடு பகுதியில் இயங்கி வரும் ரிஷ்ஸ் இண்டர்நேஷனல் ஸ்கூலில் ரிஷ்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி மற்றும் பாட்மிட்டன் போட்டி தொடக்க விழா நடைபெற்றது.

விழாவில், முன்னாள் கிரிக்கெட் வீரர் சுப்பிரமணியம் பத்ரிநாத் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி, ரிப்பன் வெட்டி, ரிஷ்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமியை தொடங்கி வைத்து, பேட்மிட்டன் ஆடி இரண்டு நாட்கள் நடைபெறும் போட்டியை தொடங்கி வைத்தார்.

தொடக்க விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் ரிஷ்ஸ் இண்டர்நேஷனல் ஸ்கூலின் சேர்மன் சக்திவேலு வரவேற்றார். இந்நிகழ்வின்போது பள்ளி முதல்வர் உடன் இருந்தார்.

# மணலி காவல் நிலையத்தை பார்வையிட்ட மாணவர்கள்



மணலி, நவ.20–

சென்னை மணலி சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த அரசு பள்ளி மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் மணலி காவல் நிலையத்தை பார்வையிட்டனர்.

மணலி காவல் உதவி ஆணையர் தக்ஷிணாமூர்த்தி மற்றும் காவல் ஆய்வாளர் சுந்தர் பள்ளி மாணவர்களுக்கு காவல் நிலையத்தில் செயல்படும் பணிகள் குறித்தும் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை பற்றியும் மற்றும் காவல் நிலையத்தில் பயன்படுத்தப்படும் காவல் நிலைய பதிவேடுகள், துப்பாக்கிகள், வாக்கி டாக்கி போன்றவற்றை காண்பித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு கவிதைப்போட்டி, பொது அறிவு போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப் போட்டி பேச்சுப் போட்டிகள் நடத்தி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

# இந்திரா காந்தி பிறந்தநாளில் ஆக்ஸிஜன் கருவி ஆரணி அரசு மருத்துவமனைக்கு காங்., வழங்கல்



ஆரணி,நவ.20–

ஆரணியில் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் 105.வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது சிலைக்கு மாலை அணிவித்து அரசு மருத்துவமனைக்கு ரூ.1 லட்சம் மதிப்பிலான ஆக்ஸிஜன் கருவி வழங்கப்பட்டது. மேலும், 300 பேருக்கு நகர காங்கிரஸ் கட்சியின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

விழாவுக்கு அசோக்குமார் வரவேற்றார். முன்னாள் எம்.எல்.ஏ., ராஜபாபு, வாசுதேவன், பஞ்சாயத்து ராஜ்ஜியம் மாவட்ட து.தலைவர் செல்வம் முன்னிலை வகித்தனர். நகர தலைவர் பொன்னையன் தலைமை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தலைவர் அண்ணாமலை பங்கேற்று முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் டில்லி மோகனரங்கன், சைதை சம்பந்தம், தாவூத் ஷெரிப், பாபு, பிள்ளையார், கண்ணன், குருமூர்த்தி, தாமோதரன், வட்டார தலைவர்கள் மணி, சுகன்யா உள்பட காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதேபோல் இரும்பேடு இந்திரா காந்தி சிலைக்கும், ஆரணி காந்தி ரோட்டிலுள்ள காந்தி சிலையில் இந்திரா காந்தியின் உருவ படத்திற்கு வட்டார தலைவர் சரவணன் தலைமையில் மாநில பொதுக்குழு உறுப்பினர் அருணகிரி மற்றும் முன்னாள் நகர தலைவர் டி.ஜெயவேல் ஆகியோர் மாலை அணிவித்து இனிப்புகளை வழங்கினர். இதில் மாவட்ட பொருளாளர் பிரசாத், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராமலிங்கம், நேத்தபாக்கம் முருகன், தெள்ளூர் சேகர், பந்தாமணி, இளங்கோவன், சிவபாண்டியன், வி.சௌந்தர், யு.ஜாபர்கான், மணிவேல், முருகன், முருகேசன், சீனு, பாபு, சுப்ராயன்பேட்டை மோகன், சுரேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

# எடப்பாடி கே.பழனிச்சாமி மீண்டும் முதல்வராக பதவி ஏற்க பொன்னேரி தர்காவில் பிரார்த்தனை



**ஊத்துக்கோட்டை, நவ.20–**

தமிழக முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் பதவி ஏற்று மக்கள் பணி ஆற்ற வேண்டும் என, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் உள்ள அன்லையத் அத்தாவுல்லாஹ் ஷா காதிரி தர்காவில் அ.தி.மு.க., சார்பில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், கட்சியின் அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன், திருவள்ளூர் வடக்கு மாவட்ட அ.தி.மு.க., செயலாளரும், பொன்னேரி முன்னாள் எம்.எல்.ஏ.,வுமான சிறுணியம் பலராமன், கும்மிடிப்பூண்டி முன்னாள் எம்.எல்.ஏ., விஜயகுமார், கும்மிடிப்பூண்டி ஒன்றிய செயலாளர் கோபால் நாயுடு, துணைச் செயலாளரும், ஒன்றிய குழு உறுப்பினருமான நாகராஜன், ஒன்றிய குழு உறுப்பினர் தேவி சங்கர், விவசாயப்பிரிவு மங்கலம் வெங்கடேசன், வக்கீல் ஈஸ்வரன் ஆகியோர் சிறப்பு பிரார்த்தனையில் பங்கேற்றனர்.

பிரார்த்தனை நிகழ்ச்சியில், அ.தி.மு.க., மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# தரங்கம்பாடி, சந்திரபாடி பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்கள்: எம்.எல்.ஏ., ஆய்வு



தரங்கம்பாடி, நவ.20–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா சந்திரபாடி மீனவ கிராமம் மற்றும் தரங்கம்பாடி பேரூராட்சி எடுக்கட்டாஞ்சேரியில் கனமழையால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு மற்றும் விலை நிலங்களை பூம்புகார் எம் எல் ஏ நிவேதா எம்.முருகன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தரங்கம்பாடி தாலுக்கா சந்திரபாடி – சின்னூர் பேட்டை மீனவ கிராமம், தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட எருக்கட்டாஞ்சேரி பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட அரசுப் பள்ளிகள், குடியிருப்பு மற்றும் கடலோரப் பகுதிகள், விவசாய விளைநிலங்களை பூம்புகார் தொகுதி எம்.எல்.ஏ.,வும், மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க., செயலாளருமான நிவேதா முருகன் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். விளை நிலங்களில் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிட்டார்.

அதைத்தொடர்ந்து கிராம மக்கள் எம்.எல்.ஏ.,விடம் கோரிக்கை மனு வழங்கினர். மனுக்களை பெற்றுக் கொண்ட எம்.எல்.ஏ., விரைவில் நடவடிக்கை மேற்கொள்கிறேன் என்று கூறினார்.

ஆய்வின்போது, செம்பை ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், வட்டார வளர்ச்சி அலுவலர் மஞ்சுளா, தரங்கை பேரூராட்சி மன்ற தலைவர் சுகுணசங்கரி குமரவேல், தி.மு.க., ஒன்றிய செயலாளர்கள் அப்துல்மாலிக், அன்பழகன், ராஜா, தரங்கை பேரூர் தி.மு.க., செயலாளர் முத்துராஜா, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பொன்.ராஜேந்திரன், தரங்கை பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன், தரங்க பேரூர் தி.மு.க., துணை செயலாளர் மதியழகன், செம்பை ஒன்றிய பொறியாளர் இளமுருகன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# திருவள்ளூர் வடக்கு, மேற்கு மாவட்ட பா.ம.க., ஆலோசனைக் கூட்டம்: அன்புமணி பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, நவ.20–

திருவள்ளூர் வடக்கு மற்றும் மேற்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் ஆலோசனைக் கூட்டம் தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலையில் உள்ள தாட்சாயணி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில், பா.ம.க., மாநில இளைஞரணி தலைவரும், எம்.பி.,யுமான அன்புமணி ராமதாஸ் கலந்துகொண்டு கட்சி வளர்ச்சி குறித்தும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். நாடாளுமன்ற தேர்தலில் பா.ம.க., கூட்டணி கட்சி அதிகளவில் வெற்றி பெறும். எனவே, தொண்டர்கள் எழுச்சியுடன் பணியாற்றுங்கள் என்றார்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் வடக்கு மாவட்ட செயலாளர் ரமேஷ், மேற்கு மாவட்ட செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான தினேஷ்குமார், எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் முரளி, ஒன்றிய தலைவர் கோவிந்தன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பா.ம.க.,வினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# இந்திரா காந்தி பிறந்தநாள் விழா ஈரோடு காங்கிரஸார் கொண்டாட்டம்



ஈரோடு, நவ.20–

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சார்பாக முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 105–வது பிறந்தநாள் விழா ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் நேற்று நடந்தது.

விழாவில், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் துணை தலைவர் ராஜேஷ் ராஜப்பா தலைமை வகித்தார். முன்னாள் மாவட்ட தலைவர் ராஜேந்திரன், மண்டல தலைவர்களான அல்டிமேட் தினேஷ், சசிகுமார், ஜாபர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் திருச்செல்வம், இந்திராகாந்தியின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் மாணவர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஆரிப் இனிப்பு வழங்கினார். இந்திரா காந்தி பிறந்த நாளை காங்கிரஸ் கட்சியினர் கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.



▶ வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காயிதே மில்லத் கூட்ட அரங்கில் இந்திய ரிசர்வ் வங்கியின் நாடு தழுவிய தீவிர விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் குமரவேல் பாண்டியன் தலைமையில் நடந்தது. இந்திய ரிசர்வ் வங்கி மண்டல மேலாளர் பிரசன்ன குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஜமால் மொஹிதீன், வங்கியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்துகொண்டனர்.

# காரைக்கால் ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய ஒருமைப்பாடு வார விழா



காரைக்கால், நவ.20–

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு வரும் 25ம் தேதி வரை தேசிய ஒருமைப்பாடு வார விழாவாக காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் கொண்டாடப்படுகிறது.

அதை முன்னிட்டு, நேற்று தேசிய ஒருமைப்பாட்டு தினமாக அனுசரிக்கப்பட்டு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய ஒருமைப்பாட்டு தினவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்திராகாந்தி உருவப்படத்திற்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் முகம்மது மன்சூர் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில், துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஆதர்ஷ், காவல் கண்காணிப்பாளர்கள் சுப்ரமணியன் (தெற்கு) மற்றும் நித்தின் ரமேஷ் கவால் (வடக்கு) மேல்நிலை கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி, முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன், நலவழித்துறை துணை இயக்குநர் சிவராஜகுமார் மற்றும் செய்தி மற்றும் விளம்பர துறை உதவி இயக்குனர் குலசேகரன் மற்றும் அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள், சமாதான கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

மேலும், மும்மத பிரார்த்தனை, தேசபக்திப் பாடல்கள் இசைத்தல் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டன.

# சென்னை திருவொற்றியூரில் சட்ட விரோதமான கழிவுநீர் கால்வாய் இடிப்பு: எம்.எல்.ஏ., அதிரடி!



**திருவொற்றியூர், நவ.20–**

சென்னை திருவொற்றியூரில் தனியார் டயர் தொழிற்சாலையில் இருந்து கால்வாய் அமைத்து அதை எண்ணூர் விரைவு சாலையில் மாநகராட்சி சார்பில், புதியதாக போடப்பட்டு முடிவு பெறாத நிலையில் இன்னும் பயன்பாட்டிற்கு வராத மழைநீர் கால்வாயில் சட்டவிரோதமாக இணைக்கப்பட்டுள்ளது என்று அப்பகுதி மக்கள் திருவொற்றியூர் எம்.எல்.ஏ., சங்கரிடம் தகவல் தெரிவித்தனர்.

இது குறித்து உடனடியாக மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். மாநாகராட்சி உதவி பொறியாளர் சரவணன் மற்றும் உதவி செயற்பொறியாளர் பாபு ஆகியோர் விரைந்து வந்து பார்வையிட்டு உடனடியாக ஜே.சி.பி., இயந்திரத்தை வரவழைத்து புதிதாக போடப்பட்ட கழிவு நீர் தொட்டியை முற்றிலுமாக அகற்றினர். பின்னர் மணல் மூட்டைகள் மூலம் அடைக்கும் பணி நடைபெற்றது.

கழிவு நீர் தொட்டியை அதிரடியாக அகற்ற நடவடிக்கை எடுத்த எம்.எல்.ஏ., சங்கருக்கு திருவொற்றியூர் பகுதி மக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

# ஆவடியில் இந்திராகாந்தி பிறந்த நாள் கோலாகலம்





ஆவடி, நவ.20–

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி 105 வது பிறந்தநாள் விழா சென்னை, ஆவடியில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

ஆவடி மாநகராட்சியை அடுத்த, மார்க்கெட் பகுதியில் உள்ள நேரு சிலை மற்றும் அன்னை இந்திரா காந்தியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, கட்சி கொடி ஏற்றி, இனிப்பு வழங்கி, ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், காங்கிரஸ் கட்சியின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட தலைவர் லயன் ரமேஷ், பொதுச் செயலாளர் அருள் அன்பரசு, ஆவடி மாநகர முன்னாள் நகர்மன்ற தலைவர் மற்றும் திருவள்ளூர் தெற்கு மாவட்ட முதன்மை துணைத் தலைவர் விக்டரி மோகன், மாநில ஓ.பி.சி., துணைத் தலைவர் ஆவடி விஸ்வநாதன், மாநில விவசாய அணி தலைவர் பவன்குமார், 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் மேகலா சினிவாசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு, திருவள்ளூர் தெற்கு மாவட்ட ஓ.பி.சி., தலைவர் ஆவடி தனா தலைமை தாங்கினார். விழா ஏற்பாடுகளை சுப்பிரமணியம், வேலுமணி, சோமசுந்தரம் ஆகியோர் செய்திருந்தனர்.

# செங்கல்பட்டு கல்குளம் ஊராட்சியில் ஆக்கிரமிக்கப்பட்ட கோவில் நிலம் மீட்பு



செய்யூர், நவ.20–

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஒன்றியம், கல்குளம் ஊராட்சி, மடவிளாகம் பகுதியில் பழமையான திருகாமேஸ்வரர் கோகிலாம்பிகை என்ற மிகவும் வரலாற்று சிறப்புமிக்க கோவில் உள்ளது. அந்தக் கோயிலுக்கு சொந்தமாக சுமார் 750 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் ஒரு பகுதியாக பூந்தோட்டம் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக கிராம மக்கள் மாவட்ட ஆட்சியருக்கு புகார் மனு அளித்தனர்.

அந்த புகார் மனு மீது விசாரணை நடத்தும்படி, மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியருக்கு குறிப்பாணை அனுப்பியும் காலதாமதம் ஏற்பட்டது. பிறகு பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி கல்குளம் ஊராட்சி மன்ற தலைவர் மலர் ரமேஷிடம் முறையிட்டு அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

அதன் பேரில், அறநிலையத்துறை அதிகாரி, தாசில்தார், வருவாய்த்துறை மற்றும் காவல் துறையினர் முன்னிலையில் மக்கள் அனைவரும் ஒன்று கூடி கோவில் நிலத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று மறியலில் ஈடுபட்டனர். பிறகு அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் ஆலோசனை செய்து நீண்ட நேரத்திற்கு பிறகு காவல்துறை ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்பை அகற்றம் செய்து அந்த இடத்தில் எச்சரிக்கை பலகை வைத்து அறநிலையத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

கல்குளம் ஊராட்சி மக்கள், அரசு அதிகாரிகளுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும், ஊராட்சி மன்ற தலைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

# திருவொற்றியூரில் மேம்பாலம் கட்டும் பணி மந்தம் சாலைகள் மோசம்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மறியல்



திருவொற்றியூர் , நவ.20–

சென்னை திருவொற்றியூரில் இருந்து மணலிவரை செல்லக்கூடிய இணைப்பு சாலையில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக மேம்பாலம் கட்டும் பணி மந்தமாக நடைபெற்று வருகிறது. அவ்வழியாக செல்லக்கூடிய இருசக்கர வாகன ஓட்டிகள் விபத்துக்குள்ளாகும் வகையில் சாலைகள் குண்டும், குழியுமாக காணப்படுகிறது.

அவ்வழியாக இயங்கி வந்த சென்னை மாநகர பேருந்துகளான 44 மற்றும் 56D போன்ற வழித்தடங்கள் மாற்றப்பட்டு பக்கிங்காம் கால்வாய், கார்கில் நகர், மணலி விரைவு சாலை வழியாக செல்வதால் பள்ளி மாணவ, மாணவியர், அப்பகுதி மக்கள் 8 கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்லும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இதைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பகுதி குழு உறுப்பினர் அருமைராஜ் தலைமையில் மறியல் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில், நூற்றுக்கணக்கான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கலந்து கொண்டு நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பினர். திருவொற்றியூர் போலீஸ் உதவி ஆணையர் முகமது நாசர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து திருவொற்றியூர் போலீசார், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் லதா, மேம்பால பணிகள் முழுவதும் மே அல்லது ஜூன் மாதத்தில் முடித்து தருவதாகவும், குண்டும் குழியுமாக உள்ள சாலைகள் சரி செய்யப்பட்டு தற்காலிகமாக பயன்படுத்தக்கூடிய வகையில் அமைத்து தரப்படும என்று வாக்குறுதி அளித்தார். இதை ஏற்றுக்கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.



▶ **வேலூர் மாவட்டம் காட்பாடி அம்முண்டி ஊராட்சியில் பழைய சாலையை விரிவுபடுத்தும் பணியை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் குமரவேல் பாண்டியன், மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், ஊர் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.**

# கள்ளக்குறிச்சியில் 9 இடங்களில் குரூப்–1 தேர்வு: 2,950 பேர் பங்கேற்பு



கள்ளக்குறிச்சி, நவ.20-
கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தேர்வுமையத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-1 (தொகுதி) தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு குரூப்-1 தேர்வு 9 இடங்களில் 16 தேர்வு கூடங்களில் நடைபெற்றது. இத்தேர்விற்கு 4 ஆயிரத்து 623 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், 2 ஆயிரத்து 950 பேர் மட்டுமே கலந்து கொண்டு தேர்வு எழுதினர். இதில் விண்ணப்பித்திருந்த ஆயிரத்து 673 நபர்கள் தேர்விற்கு வரவில்லை.

இத்தேர்வு நடைபெறும் மையங்களில், தடையில்லா மின்சாரம், போக்குவரத்து வசதி, தீயணைப்பு பாதுகாப்பு, தேர்வு மைய வளாகத் தூய்மை, ஆயுதம் தாங்கிய காவலர் பாதுகாப்பு, நிலையான கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி முன்னேற்பாடு பணிகளுடன் தேர்வுகள் நடைபெற்றன.

மேலும், 2 பறக்கும்படை, 5 நபர்கள் கொண்ட 3 சுற்று குழுக்கள் கண்காணிப்பு பணிகளிலும், 50 காவலர்கள் பாதுகாப்பு பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதுவதற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மாவட்ட நிர்வாகம் சார்பில் மேற்கொள்ளப்பட்டன.




# திருந்தி வாழும் மாவோயிஸ்ட் பெண்ணுக்கு தமிழக அரசு சார்பில் ஆவின் அங்காடி வழங்கல்



வேலூர், நவ.20-
முதியோர் இல்லத்தில் வாழும் மனம் திருந்திய மாவோயிஸ்ட் இயக்க பெண்ணிற்கு தமிழக அரசின் சார்பில் 2.50 லட்சம் மதிப்பில் ஆவின் அங்காடி வழங்கும் அதை வேலூர் மாவட்ட ஆட்சியர் திறந்து வைத்தார்.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் காவல் துறையிடம் சரணடைந்து மனம் திருந்தி அரியூரில் (ஸ்ரீ சாய் தஞ்சம்) முதியோர் இல்லத்தில் வாழும் மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த பிரபா என்கிற சந்தியா என்ற பெண்ணுக்கு தமிழக அரசின் மூலம் வேலூர் மாவட்டம் அரியூர் மலைக்கொடி ஸ்ரீபுரம் தங்கக்கோயில் செல்லும் சாலையில் ரூ.2.50 லட்சம் மதிப்பிலான ஆவின் நிறுவன தயாரிப்பு பொருட்கள் விற்பனை அங்காடியை மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் வழங்கி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை க்யூ பிரிவு குற்ற புலனாய்வு துறை காவல் கண்காணிப்பாளர் கண்ணம்மாள், வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்ணன், ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபா சத்தியன், திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையர் அசோக்குமார், மாற்றுத்திறனாளி நல அலுவலர் சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முட்டைகளை விழுங்கிய நல்லபாம்பு தீயணைப்புத்துறையினர் பிடித்தனர்



இலுப்பூர், நவ.20-
இலுப்பூர் அருகே மாட்டுக்கொட்டகையில் கோழி அடையில் வைத்திருந்த முட்டைகளை விழுங்கிய நல்ல பாம்பை தீயணைப்பு துறையினர் பிடித்து வனப்பகுதியில் விட்டனர்.

இலுப்பூர் அருகே உள்ள மருதம்பட்டியை சேர்ந்தவர் சித்ரா. இவரது வீட்டின் மாட்டுக் கொட்டகையில் கோழி அடையில் முட்டைகளை வைத்துள்ளார். இந்நிலையில் சித்ரா அங்கு சென்று பார்த்தபோது நல்லபாம்பு ஒன்று அடைக்கு வைத்திருந்த முட்டைகளை விழுங்கிக் கொண்டிருந்தது. இதையடுத்து அவர் உடனடியாக இலுப்பூர் தீயணைப்பு அலுவலகத்திற்கு தகவல் அளித்தார்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த இலுப்பூர் தீயணைப்பு நிலைய அலுவலர் முருகேசன் தலைமையிலான வீரர்கள் கோழி அடையில் இருந்த நல்லபாம்பை லாவகமாக பிடித்து சாக்குப்பையில் அடைத்து வனப்பகுதியில் பத்திரமாக விட்டனர்.

# தென்காசியில் இந்திராகாந்தி பிறந்த நாள் விழா



தென்காசி, நவ.20-
முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி ஆசாத் நகரில் அமைந்துள்ள அவரது சிலைக்கு தென்காசி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும், தென்காசி எம்.எல்.ஏ.,வுமான பழனி நாடார் மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நகரத் தலைவர் காதர் மைதீன், மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜேம்ஸ், மாவட்ட பொதுச்செயலாளர்கள் கணேசன், காஜாமைதீன், சுப்பிரமணியன், குமார், ரபீக், ஈஸ்வரன், சேட், சுரண்டை பிரபாகரன், அரவிந்த், பிரபு, கந்தையா உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் கொண்டனர். முடிவில், கணேசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டம் கடையநல்லூரில் தி.மு.க., இளைஞரணி ஏற்பாடு



தென்காசி, நவ.20-
தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் தி.மு.க., இளைஞரணி சார்பில் திராவிட மாடல் பயிற்சி கூட்டம் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் சிவ பத்மநாபன் தலைமையில் அப்துல்லா எம்.பி., செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, தி.மு.க. இளைஞரணியினருக்கு கடையநல்லூர் தேவர் மஹாலில் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

நிகழ்ச்சியில், தென்காசி எம்.பி., தனுஷ் குமார், ஆறுமுகச்சாமி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், ஹக்கீம் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ், முன்னாள் மாவட்ட செயலாளர் செல்லத்துரை, கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் கபீப் ரஹ்மான், ஒன்றிய செயலாளர் சுரேஷ், ஜவேந்திரன் தினேஷ், வல்லம் ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் சாமிதுரை, சிங்கிலிபட்டி மணிகண்டன், வேலுச்சாமி அவைத்தலைவர், மாவட்ட பிரதிநிதி மணிகண்டன், தென்காசி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, அருணாசல பாண்டியன், மைதீன், ராஜா, வஹாப், மஜித், 10-வார்டு முருகன், 11-வது வார்டு முகைதீன் கனி, 13- வது வார்டு திவான் மைதீன், வலசை மதி, நல்லையா, 1-வது வார்டு காளிமுத்து, குற்றாலம் சுரேஷ், கூட்டுறவு சங்க தலைவர் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞரணி நிர்வாகிகள், மாவட்ட சார்பணி நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்டோர் திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# அரியலூரில் அகில இந்திய கூட்டுறவு வார நிறைவு விழா



அரியலூர் நவ.20-
அரியலூர் வாலாஜாநகரம், அன்னலட்சுமி ராஜபாண்டியன் திருமண மண்டபத்தில், கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற, 69-வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவுக்கு, போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தலைமை வகித்தார். அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தீபா சங்கரி வரவேற்று பேசினார்.

கூட்டுறவு தொடர்பான, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கியும், அரியலூர், செந்துறை, கீழப்பழுவூர், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உள்பட, சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் வழங்கியும், பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், அமைச்சர் சிவசங்கர் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் சந்திரசேகர், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளி பிரபு உள்ளிட்ட மாவட்ட அளவிலான அதிகாரிகள், கூட்டுறவு சங்க மேலாளர் சக்திவேல், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க செயலாளர்கள் செந்துறை கொளஞ்சிநாதன், அரியலூர் மணி உள்ளிட்ட கூட்டுறவுத்துறை அலுவலர்கள், பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அரியலூர் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் ஜெயராமன் நன்றி கூறினார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தெற்கு ஒன்றிய ஓ.பி.எஸ்., அணி அ.தி.மு.க., செயலாளராக நியமிக்கப்பட்ட குடியரசு மணி, மாவட்ட செயலாளர் வேங்கையன் முன்னிலையில் எம்.ஜி.ஆர்., சிலைகளுக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கப்பட்டது.



கீரனூர் அருகிலுள்ள மேலமுத்துடையான்பட்டி கிராமத்தில் கால்நடை சிகிச்சை முகாமினை துணைப்பதிவாளர், பணியாளர் அலுவலர் அப்துல்சலீம் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் குமார், ஒன்றிய மேலாளர் செந்தில்நாதன் மற்றும் ஆவின் அலுவலர்கள், மருத்துவர்கள் கலந்துகொண்டனர்.

# "டோனி போலோ" புதிய பசுமை ஏர்போர்ட் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைப்பு



இட்டா நகர், நவ.20-
அருணாச்சல் பிரதேசம் மாநிலம் இட்டா நகரில் "டோனி போலோ" என்கிற புதிய பசுமை விமான நிலையத்தை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்தார்.

அருணாச்சல பிரதேசத்தின் தலைநகருக்கு அருகிலுள்ள ஹோலோங்கி பகுதியில் கடந்த 2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரதமர் மோடி புதிய பசுமை விமான நிலையத்திற்கான அடிக்கல் நாட்டினார். இதன் பணிகள் முழுமையாக முடிவடைந்த நிலையில், பிரதமர் மோடி நேற்று (நவ.19) "டோனி போலோ" புதிய பசுமை விமான நிலையத்தை தொடங்கி வைத்தார்.

இந்த விமான நிலைய சேவை வடகிழக்கு மாநிலத்தின் தலைநகரை இணைக்கும் வகையில் உள்ளது. இது மாநில எல்லை மற்றும் மற்ற இந்திய நகரங்களுடன் வணிக விமானங்கள் மற்றும் அருணாச்சல பிரதேசத்தின் பிற பகுதிகளுடன் ஹெலிகாப்டர் சேவைகள் மூலம் இணைக்கும். இந்த விமான சேவை மூலம் பிராந்தியத்தில் இருந்து சுமார் 20 லட்சம் பேர் பயனடைவார்கள் என்றும், இணைப்பு, வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்த உதவும் என்றும் அருணாச்சல பிரதேச உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் ஒற்றை யானை அட்டகாசம்



மேட்டுப்பாளையம், நவ.20-
மேட்டுப்பாளையம் - கோத்தகிரி மலைப்பாதையில் அடர்ந்த வனப்பகுதி உள்ளது. கடந்த சில நாட்களாக உணவு, குடிநீர் தேடி இந்த சாலையை ஒட்டியுள்ள வனப்பகுதியில் இருந்து வரும் ஒற்றை காட்டு யானை இப்பகுதியில் நடமாடி மக்களை அச்சுறுத்தி வருகிறது.

மேட்டுப்பாளையம் - கோத்தகிரி இடையே குஞ்சப்பனை வரை உள்ள இச்சாலை குறுகிய அளவில் உள்ளது. இதனிடையே சாலையில் யானை வந்தால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். அச்சமயம் காட்டுயானைகள் உலா வந்தால் தானாகவே வனப்பகுதியினுள் சென்ற பின்னரே வாகன ஓட்டிகள் மீண்டும் சாலையில் வாகனங்களை இயக்க வேண்டிய அவல நிலை உள்ளது.

கடந்த ஒரு வாரமாக குஞ்சப்பனை பகுதியில் நடமாடி வந்த ஒற்றை காட்டு யானை மேட்டுப்பாளையத்தில் இருந்து கோத்தகிரி சாலையில் 3வது கொண்டை ஊசி வளைவில் சந்தைக்கு காய்கறி, மளிகை பொருட்கள் ஏற்றி வந்த மினி வேனை மறித்தது. மேலும், வேனில் இருந்த மளிகை பொருட்களை எடுத்து சூறையாடியது. தொடர்ந்து வாகனத்தின் கண்ணாடியை உடைக்க முயன்றது.

அப்போது, வாகனத்தை ஓட்டுநர் சாதுரியத்துடன் பின்னோக்கி இயக்கினார். அதன்பின் காட்டுயானை அரை மணி நேரத்திற்கு பின்னர் வனப்பகுதிக்குள் சென்றது. இச்சம்பவம் கோத்தகிரி மலைப்பாதையில் பயணிக்கும் வாகன ஓட்டுநர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, பகல் நேரத்தில் மலைப்பாதையில் நடமாடும் காட்டுயானையை அடர்ந்த வனத்திற்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# அரியலூரில் வளர்ச்சி, ஒருங்கிணைப்பு கண்காணிப்புக்குழு கூட்டம்



அரியலூர், நவ. 20-
அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம், அதன் தலைவரும், சிதம்பரம் எம்.பி.,யுமான தொல்.திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ரமண சரஸ்வதி முன்னிலை வகித்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ஈஸ்வரன் வரவேற்றார்.

இக்கூட்டத்தில், ஜெயங்கொண்டம் எம்.எல்.ஏ., கண்ணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் சந்திரசேகர் உள்ளிட்டோர், சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக மத்திய, மாநில அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், மத்திய அரசின் சார்பில், அரியலூர் மாவட்டத்தில், பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் 43 திட்டங்கள் குறித்தும், அதன் முன்னேற்றம் குறித்து தொல். திருமாவளவன் தலைமையில், ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட வழங்கல் அலுவலகம், பேரூராட்சிகள், நகராட்சிகள், குடிநீர் வடிகால் வாரியம், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை, நில அளவைத்துறை, மின்சார வாரியம், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, பொது சுகாதாரம், பள்ளிக்கல்வி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சத்துணவு, பி.எஸ்.என்.எல்., அஞ்சலகத் துறை, தெற்கு ரயில்வே, சுரங்கங்கள் மற்றும் கனிம வளத்துறை, மாவட்ட தொழில் மையம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, மாவட்ட முன்னோடி வங்கி உள்ளிட்ட பல்வேறுத் துறை அலுவலர்கள் தங்களது துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், பணி முன்னேற்றம் குறித்தும் எடுத்துரைத்தனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் சுருளி பிரபு, ஊரக வாழ்வாதார இயக்கத் திட்ட அலுவலர் முருகண்ணன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தீபாசங்கரி, மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், ஒன்றியக்குழுத் தலைவர்கள் சுமதி அசோக சக்கரவர்த்தி (திருமானூர்), ரவிசங்கர் (ஜெயங்கொண்டம்), மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் குரூப் –1 தேர்வு 33 மையங்களில் அதிகாரிகள் கண்காணிப்பு



ஈரோடு, நவ.20-
ஈரோடு மாவட்டத்தில் 33 மையங்களில் நடந்த குரூப் -1 தேர்வை அதிகாரில் நேரில் சென்று கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் குரூப் -1 தேர்வு மாநிலம் முழுவதும் நடைபெற்றது. ஈரோடு மாவட்டத்தில் இத்தேர்வானது 33 மையங்களில் நடைபெற்றது.

மொத்தம் 92 பதவிகளுக்கான இந்த எழுத்துத் தேர்வில் பங்கேற்க ஈரோடு மாவட்டத்தில் 10 ஆயிரத்து 115 பேர் விண்ணப்பித்திருந்தனர். தேர்வு கண்காணிக்கும் பணியில் 9 பறக்கும் படைகள், 7 நடமாடும் குழுக்கள், 34 ஒளிப்பதிவாளர்கள், 33 கண்காணிப்பு அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேர்வு மையங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

அரசு போக்குவரத்து கழகம் சார்பில் ஈரோடு மாவட்டத்தில் அமைந்திருந்த 33 தேர்வு மையங்களுக்கு சிறப்புபஸ்கள் இயக்கப்பட்டன. தேர்வு எழுதவந்தவர்கள் இந்த பஸ்ஸில் சென்று பயனடைந்தனர்.

# டூவீலரில் இருந்து கீழே விழுந்து படுகாயம்: கல்லூரி மாணவன் பலி



அன்னவாசல், நவ.20-
புதுக்கோட்டை மாவட்டம் சத்தியமங்கலம் உடையான்டிபட்டியை சேர்ந்தவர் ராசு இவரது மகன் நவீன்பிரசாத் (வயது20) அன்னவாசலையடுத்த பெருமநாட்டில் உள்ள தனியார் கல்லூரியில் படித்து வந்த நிலையில் சம்பவத்தன்று நவீன்பிரசாத் தனது உறவினர் கீரனூர் பகுதியை சேர்ந்த கார்த்திக் என்பவருடன் மோட்டார் சைக்கிளில் மாற்றுச்சான்றிதழ் வாங்குவதற்கு கல்லூரிக்குச் சென்றதாக கூறப்படுகிறது

பின்னர் கல்லூரியில் இருந்து இருவரும் வீடு திரும்பியுள்ளனர். அப்போது கார்த்திக் மோட்டார் சைக்கிளை ஓட்டினார். நவீன்பிரசாத் பின்னால் அமர்ந்திருந்தார். இவர்களது மோட்டார் சைக்கிள் புதுக்கோட்டை பெருமநாடு சாலையில் மேலப்பளுவஞ்சி பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது எதிர்பாராத விதமாக நிலைதடுமாறி மோட்டார் சைக்கிளில் இருந்து நவீன்பிரசாத் கீழே விழுந்துள்ளார்.

இதில், படுகாயம் அடைந்த அவரை புதுக்கோட்டை அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். அன்னவாசல் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# தமிழைக் காக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு: பிரதமர்

# இந்திய தேர்தல் ஆணையர் அருண் கோயல் நியமனம்





# மயிலாடுதுறையை பேரிடர் மாவட்டமாக அரசு அறிவிக்க கோரிக்கை


சென்னை / புதுக்கோட்டை | 20.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

20.11.2022 ஞாயிறு

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

திப்பு சுல்தான் , மைசூர் பேரரசர் (பி.1750) (இ.1799)



மினூ மசானி , இந்திய அரசியல்வாதி (பி.1905) (இ.1998)



மில்கா சிங் , இந்தியத் தடகள விளையாட்டு வீரர் (பி.1929) (இ.2021)



ஜோ பைடன் , அமெரிக்க அரசியல்வாதி (பி.1942)



தேவா , தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர், பாடகர் (பி.1950)



## இன்றைய நினைவு நாள்

ஹென்றி டிரேப்பர் , அமெரிக்க மருத்துவர், வானியலாளர் (பி.1837) (இ.1882)



ஜி. ராமநாதன் , தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர் (இ.1963)

